ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமொழி

# 4.10 – துப்புடையாரை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமானுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 4.10 – துப்புடையாரை

‡ துப்புடையாரை அடைவதெல்லாம் ⋆
    சோர் விடத்துத் துணை ஆவர் என்றே ⋆
ஒப்பிலேன் ஆகிலும் நின் அடைந்தேன் ⋆
    ஆனைக்கு நீ அருள் செய்தமையால் ⋆
எய்ப்பென்னை வந்து நலியும்போது ⋆
    அங்கேதும் நான் உன்னை நினைக்க மாட்டேன் ⋆
அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன் ⋆
    அரங்கத்தரவணைப் பள்ளியானே ! ‖ **4.10.1** ‖

சாம் இடத்தென்னைக் குறிக்கொள் கண்டாய் ⋆
    சங்கொடு சக்கரம் ஏந்தினானே ! ⋆
நா மடித்தென்னை அநேக தண்டம் ⋆
    செய்வதா நிற்பர் நமன் தமர்கள் ⋆
போம் இடத்துந்திறத்தெத்தனையும் ⋆
    புகாவண்ணம் நிற்பதோர் மாயை வல்லை ⋆
ஆம் இடத்தே உன்னைச் சொல்லி வைத்தேன் ⋆
    அரங்கத்தரவணைப் பள்ளியானே ! ‖ **4.10.2** ‖

எல்லையில் வாசல் குறுகச் சென்றால் ⋆
    எற்றி நமன் தமர் பற்றும்போது ⋆
நில்லுமின் என்னும் உபாயம் இல்லை ⋆
    நேமியும் சங்கமும் ஏந்தினானே ! ⋆
சொல்லலாம் போதே உன் நாமம் எல்லாம் ⋆

சொல்லினேன் என்னைக் குறிக்கொண்டென்றும் ⋆
அல்லல் படாவண்ணம் காக்க வேண்டும் ⋆
அரங்கத்தரவணைப் பள்ளியானே ! ॥ **4.10.3** ॥

ஒற்றை விடையனும் நான்முகனும் ⋆
உன்னை அறியாப் பெருமையோனே ! ⋆
முற்ற உலகெல்லாம் நீயே ஆகி ⋆
மூன்றெழுத்தாய முதல்வனே ஓ ! ⋆
அற்றது வாழ்நாள் இவற்கென்றெண்ணி ⋆
அஞ்ச நமன் தமர் பற்றல் உற்ற ⋆
அற்றைக்கு நீ என்னைக் காக்க வேண்டும் ⋆
அரங்கத்தரவணைப் பள்ளியானே ! ॥ **4.10.4** ॥

பை அரவின் அணைப் பாற்கடலுள் ⋆
பள்ளி கொள்கின்ற பரம மூர்த்தி ! ⋆
உய்ய உலகு படைக்க வேண்டி ⋆
உந்தியில் தோற்றினாய் நான்முகனை ⋆
வைய மனிசரைப் பொய் என்றெண்ணிக் ⋆
காலனையும் உடனே படைத்தாய் ⋆
ஐய ! இனி என்னைக் காக்க வேண்டும் ⋆
அரங்கத்தரவணைப் பள்ளியானே ! ॥ **4.10.5** ॥

தண்ணெனவில்லை நமன் தமர்கள் ⋆
சாலக் கொடுமைகள் செய்யா நிற்பர் ⋆
மண்ணொடு நீரும் எரியும் காலும் ⋆
மற்றும் ஆகாசமும் ஆகி நின்றாய் ! ⋆
எண்ணலாம் போதே உன் நாமம் எல்லாம் ⋆
எண்ணினேன் என்னைக் குறிக் கொண்டென்றும் ⋆

அண்ணலே ! நீ என்னைக் காக்க வேண்டும் ⋆
அரங்கத்தரவணைப் பள்ளியானே ! ‖ **4.10.6** ‖

செஞ்சொல் மறைப்பொருள் ஆகி நின்ற ⋆
தேவர்கள் நாயகனே ! எம்மானே ! ⋆
எஞ்சலில் என்னுடை இன் அமுதே ! ⋆
ஏழ் உலகும் உடையாய் ! என் அப்பா ! ⋆
வஞ்ச உருவின் நமன் தமர்கள் ⋆
வலிந்து நலிந்தென்னைப் பற்றும்போது ⋆
அஞ்சலம் என்றென்னைக் காக்க வேண்டும் ⋆
அரங்கத்தரவணைப் பள்ளியானே ! ‖ **4.10.7** ‖

நான் ஏதும் உன் மாயம் ஒன்றறியேன் ⋆
நமன் தமர் பற்றி நலிந்திட்டு ⋆ இந்த
ஊனே புகேயென்று மோதும்போது ⋆
அங்கேதும் நான் உன்னை நினைக்க மாட்டேன் ⋆
வானேய் வானவர் தங்கள் ஈசா ! ⋆
மதுரைப் பிறந்த மா மாயனே ! ⋆ என்
ஆனாய் ! நீ என்னைக் காக்க வேண்டும் ⋆
அரங்கத்தரவணைப் பள்ளியானே ! ‖ **4.10.8** ‖

குன்றெடுத்தாநிரை காத்த ஆயா ! ⋆
கோநிரை மேய்த்தவனே ! எம்மானே ! ⋆
அன்று முதல் இன்றறுதியா ⋆
ஆதியஞ்சோதி மறந்தறியேன் ⋆
நன்றும் கொடிய நமன் தமர்கள் ⋆
நலிந்து வந்தென்னைப் பற்றும்போது ⋆

அன்றங்கு நீ என்னைக் காக்க வேண்டும் ⋆
    அரங்கத்தரவணைப் பள்ளியானே ! ॥ **4.10.9** ॥

‡ மாயவனை மதுசூதனனை ⋆
    மாதவனை மறையோர்கள் ஏத்தும் ⋆
ஆயர்கள் ஏற்றினை அச்சுதனை ⋆
    அரங்கத்தரவணைப் பள்ளியானை ⋆
வேயர் புகழ் வில்லிபுத்தூர் மன் ⋆
    விட்டுசித்தன் சொன்ன மாலை பத்தும் ⋆
தூய மனத்தனர் ஆகி வல்லார் ⋆
    தூ மணிவண்ணனுக்காளர் தாமே ॥ **4.10.10** ॥

அடிவரவு — துப்பு சாமிடத்து எல்லை ஒற்றை பை தண்ணேனவு செஞ்சொல் நான் குன்று மாயவனை வாக்கு

துப்புடையாரை முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்